பக்கங்கள் 19

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 27 வியாழக்கிழமை 16.11.2023 அதிர்வு 108

## பணத்துக்காக தந்தையை படுகொலை செய்த மகன்

(இரத்தினபுரி நிருபர்)

இரத்தினபுரியில் தந்தையை அவரது மகன் அடித்துக் கொலை செய்த கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தில் பணம் தொடர்பான 04

# உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்கவேமாட்டாராம் மஹிந்தர்

### வாய்ப்புக் கிடைக்கும்போது காரணத்தைக் கூறுவாராம்



“இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தவறாகக் கையாண்டமைக் குத் நானும் அரசில் அங்கம் வகிக்கும் பலரும் பொறுப்புக்கூற வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மாட்டேன்.”

– இவ்வாறு கோட்டாபய அரசில் பிரதம ராகப் பதவி வகித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

04



# எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள்

## பல வருடங்களாகச் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை



15 ஆண்டுகளாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப் பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியான மாத்தளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் சுப்பிரமணியம் சுரேந்திரராஜாவை அண்மையில் ‘நிரபராதி’ எனத் தெரிவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது. அவரைக் ‘குரலற்ற வர்களின் குரல்’ அமைப்பினர் சந்தித்தபோது...

எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள் என்று பல வருடங்களாகச் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

“கடந்த 2006 ஓகஸ்ட் 14 ஆம் திகதி, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, 15 ஆண்டுகளாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளை, ‘நிரபராதிகள்’ எனத் தெரிவித்த கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களைக் கடந்த 10 ஆம் திகதி விடுதலை செய்துள்ளது.

04

## மீண்டெழ அரசியல் தீர்வு அன்றி பொருளாதாரத் தீர்வே அவசியம்

### இப்படிச் சொல்கின்றார் அமைச்சர் பந்துல



நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீள, அரசியல் தீர்வு கள் பயனற்றவை எனவும், பொருளா தாரத் தீர்வுகளே அவசியம் எனவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற் றும் வெகுசன ஊடக அமைச்சர் 04

## உயிர் அச்சுறுத்தல் தகவலையடுத்து ரொஷானுக்குப் பாதுகாப்பு அதிகரிப்பு

### உறுதிப்படுத்தினார் பொலிஸ் பேச்சாளர்

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் அவரது பாதுகாப்பைப் பலப்படுத்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நட வடிக்கைகளை எடுத்துள்ளது. 04





# யாழில் பொலித்தீன் பாவனை தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகள் பற்றிய விழிப்பூட்டல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட பொலித்தீன் விற்பனையாளருக்கான பொலித்தீன் பாவனை தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகள் பற்றிய விழிப்பூட்டல் பேரணி இன்று யாழில் இடம்பெற்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பொலித்தீன், பிளாஸ்டிக் விற்பனை யாள ருக்கான பொலித்தீன் பாவனை தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகள் தொடர் பான விழிப்பூட்டல் இடம்பெற்றதுடன் விழிப் பூட்டல் பேரணியும் இடம்பெற் றது.

இந்த நிகழ்வு மத்திய சுற்றாடல் அதி கார சபையின் யாழ். மாவட்ட அலுவ லகத்தின் பிரதிப் பணிப்பாளர் து. சுபோகரன் தலைமையில் நடைபெற்றது.

யாழ். திருக்குடும்பக் கன்னியர் தேசிய பாடசாலையின் சுற்றாடல் முன்னோடி மாணவர்கள், பொறுப்பாசிரியர்கள், யாழ். பொலிஸ் நிலைய சுற்றாடல் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.








# ‘பட்ஜெட்’டுக்கு ஆதரவளிக்காமல் தேர்தலுக்குத் தயாராவது நல்லது!

## இப்படி யோசிக்கிறது மொட்டுக் கட்சி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கினால், கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஒட்டு மொத்த மக்களாலும் நிராகரிக்கப் படலாம். எனவே ‘பட்ஜெட்’டுக்கு ஆதர வளிக்காமல் விட்டு தேர்தல் ஒன்றுக்கு தயாராவது நல்லது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கருதுகிறது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

நெலும் மாவத்தை கட்சி அலுவ லகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சி மாநாடு மற்றும் வரவு – செலவுத் திட்டம் தொடர்பான கூட்டத்தின் போது இந்த விடயம் தொடர்பில் கலந்துரை யாடப்பட்டது என்று தெரிவிக்கப் படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ, பெசில் ராஜ பக்ஷ ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், ராஜபக்ஷ மாருக்கு எதிரான உயர்நீதிமன்றத் தீர்ப்பு குறித்தும் பேசப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துக்கான வரவு – செல வுத் திட்ட முன்மொழிவுகளை இவ்வருட வரவு – செலவுத் திட்டத்துக்கு சமர்ப்பித் துள்ளதால் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை கள் குறித்தும் சிரேஷ்ட உறுப்பினர்கள் இங்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்பதற்கு முன்னர் இருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நாமல் ராஜபக்ஷ , இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட இளம் எம்.பிக்கள் குழுவிடம் பரிந்துரைத்துள்ளார்.

எவ்வாறாயினும், வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்புக்கு முன்னர் ஜனாதிபதி யுடன் இது தொடர்பில் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்குமாறு கட்சித் தலை மையிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் தேர்தல்தொடர்பில்கலந்துரையாடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பட்ஜெட்டுக்கு ஆதரவளிக்காவிட்டால் தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டிய நிலைமை உருவாகலாம். எனவே ஆதரவளிக்காமல் விட்டு தேர்தல் ஒன்றுக்கு தயாராவது நல்லதென கட்சியின் உறுப்பினர்கள் பலர் இந்த கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# வெல்லம்பிட்டிய பாடசாலை மாணவி உயிரிழப்பு; விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பணிப்பு!

வெல்லம்பிட்டிய வெஹெரகொட கனிஷ்ட கல்லூரியில் நீர் குழாய் பொருத்தப்பட்டிருந்த கொங்கிரீட் தூ ண் சரிந்து விழுந்ததில் 5 சிறுவர்கள் காயமடைந்ததோடு சிறுமி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசார ணைகளை ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சு கல்வி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து உடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வலய கல்வி அலுவலக அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, அந்தப் பாடசாலைக்குச் சென்று சம்பவம் தொடர்பில் விசார ணைகளை ஆரம்பிக்கவுள்ளது என்று ஜயவர்தனபுர வலயக் கல்விப் பணிப் பாளர் அலுவலகம் தெரிவித்துள் ளது.

நேற்று முற்பகல் (15) கைகளை கழு விக் கொண்டிருந்த முதலாம் தரத்தைச் சேர்ந்த 06 மாணவர்கள் மீது தண்ணீர் குழாய்கள் பொருத்தப்பட்டிருந்த கொங் கிரீட் சுவர் இடிந்து விழுந்தது.

விபத்தில் காயமடைந்த மாணவி ஒருவர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். மேலும் ஐவர் காயம டைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவத்தின் பின்னர் பிரதேச வாசிகள் குழுவொன்று பாடசாலையின் அதிபரை தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலையில் நிலவிய அமைதி யின்மை காரணமாக பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் கல்வி நடவ டிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீனவர் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகள் கிட்டும்!

## பைசல் காசிம் எம்.பி. நம்பிக்கை

(அஸ்ஹர் ஆதம்)

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் விரை வில் கிடைக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (14) இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சு சார் ஆலோச னைக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமால் ஏற்கனவே கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட மீன வர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக் கான முன்னெடுப்புகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது. அவற்றுக் கான தீர்வுகளை விரைவில் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கையும் நாடாளுமன்ற உறுப்பினர் இங்கு முன் வைத்தார்.

இதனடிப்படையில், களுவாஞ்சிகுடி தேத்தாத்தீவு பிரதேசத்தில் மீன்பிடி வலைகள் வெட்டப்பட்டு மீன்கள் எடுத்துச் செல்லப்பட்ட பிரச்சினைக்கான தீர்வு மற்றும் முன்னெடுப்புகள் கல்முனை ரேடியோ நிலையத்தை மீள தாபித்தல் தொடர்பிலான தீர்வு மற்றும் முன்னெ டுப்புகள் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்துக்கான புதிய இறங்கு துறைக்கான நிர்மாணத்துக்கான முன்மொழிவு கடலரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிந்தவூர், மாளி கைக்காடு சாய்ந்தமருது ஆகிய பிரதே சங்களில் மீனவர்கள் தங்கள் அன்றாட தொழில் முன்னெடுப்புகளை செய்வதில் எதிர்நோக்கும் சிரமங்களை அமைச்சர் மற்றும் அதிகாரிகள் கள விஜயம் ஒன்றின் மூலம் பார்வையிடுவதற்கான கோரிக்கை போன்ற விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இவை தொடர்பில் மீனவர்களுக்கும், பொது மக்களுக்கும் விரைவில் நல்ல தீர்வுகள் கிடைக்கும் என்று தான் எதிர் பார்ப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் நம்பிக்கை வெளியிட் டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மீண்டெழ...**

கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணை கிடைத்ததன் பின்னர், தடைப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரலாற்றுச் சிறப்புமிக்க, ரெடிகல் மற்றும் புரட்சியான ஒரு வரவு - செலவுத் திட்டத்தையே இம்முறை சமர்ப்பித்துள்ளார். இது வங்குரோத்து அடைந்ததாக உத்தியோகபூர்வமாக அறிவித்த ஒரு நாட்டின் வரவு - செலவுத் திட்டமாகும். வேறு எந்தவொரு நிதி அமைச்சரும் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது இவ்வாறானதொரு நிலைமை நாட்டில் இருக்கவில்லை.

இந்நாடு, பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு தர்க்க ரீதியிலான பிரதான இரண்டு காரணங்களே உள்ளன. முதலாவது, அரச வரவு - செலவுத் திட்டத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை. இரண்டாவது, சர்வதேச கொடுப்பனவுக் கையிருப்பின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை ஆகியவை ஆகும்.

நாட்டின் அன்றாட செயற்பாடுகளுக்காக அரசு மேற்கொள்ளும் நிர்வாகச் செலவுகளுக்குப் போதுமான அளவு நிதி இல்லாமை மற்றும் இறக்குமதிகளுக்கு ஏற்ப ஏற்றுமதி வருமானம் இல்லாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்தப் பற்றாக்குறைகள் ஏற்படுகின்றன. கடந்த காலங்களில் அனைத்து அரசுகளும் பின்வரும் மூன்று பிரதான வழிமுறைகளின் ஊடாக இந்தப் பற்றாக்குறைகளை ஈடுசெய்துள்ளன. முதலாவது, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடன்களைப் பெற்றுக்கொள்ளல். இரண்டாவது, அரச சொத்துக்களை விற்பனை செய்தல். மூன்றாவது, இவை இரண்டும் போதுமானதாக இல்லாதவிடத்து பணத்தை அச்சிடுதல் ஆகும். அரச நிதி தொடர்பான அனைத்து முகாமைத்துவ அதிகாரமும் நாடாளுமன்றத்தூக்கி உள்ளது. இவ்வாறு பற்றாக்குறை தொடர்ந்தும் ஏற்பட்டு, நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லாமல் இருப்பதற்காக கடந்த காலங்களில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன.

துரதிஷ்டவசமாக அண்மைய வருடங்களில் இந்த சட்டங்களுக்கேற்ப செயற்படாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது.

நிதி முகாமைத்துவம் தொடர்பில், அன்று ஆட்சியில் இருந்த அரசு தோல்வி கண்டதையடுத்தே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று, இந்த நெருக்கடியைத் தீர்க்க முன்வந்தார். இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இதற்குப் பொருத்தமான தீர்மானமாக கடன் மறுசீரமைப்பு மூலம் தீர்வைப் பெறுவதற்கு ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டார்.

இவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படாமல் இருக்க, பின்வரும் நான்கு முக்கிய நோக்கங்களைக் கருத்தில்கொண்டு 2024 வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இயலுமான அளவு அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ளல், அரசின் மூலதனச் செலவுகள் மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறைத்தல், ஏற்றுமதி மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணியை அதிகரித்தல், இறக்குமதிக்காக செலவிடப்படும் அந்நியச் செலாவணியைக் குறைத்தல் ஆகிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக சர்வதேச கொடுப்பனவுகளில் நடைமுறைக் கணக்கு மேலதிகக் கையிருப்பு மீதியைப் பேணுவதன் மூலம் அதில் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

2024 வரவு - செலவுத் திட்டம் மூலம் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களின் சம்பளம், அரசின் பிரதான வருமான மூலமான அரச வரி வருமானத்தில் இருந்துதான் வழங்க வேண்டும் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

வரவு - செலவுத் திட்டத்துக்குப் பிறகு, சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கடன் கிடைக்கவுள்ளது. கடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் செயல்படுத்த போதுமான நிதி எமக்குக் கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளோம். அதன் பிறகு, முடங்கிய அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிக்க முடியும்." - என்றார்.

---

**உயர்நீதிமன்றத்தின்...**

நிதி முறைகேடுகள் மற்றும் பொருளாதாரத்தின் தவறான நிர்வாகத்துக்குக் காரணமானவர்களுக்கு எதிராக அண்மையில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அந்த மனுக்கள் மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் மற்றும் சீரற்ற நிதி நிர்வாகத்துக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தநிலையில், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறீர்களா என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மஹிந்த ராஜபக்ஷ இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இதன்படி, குறித்த தீர்ப்பை ஏற்கமாட்டேன் எனவும், வாய்ப்புக் கிடைக்கும்போது அதற்கான காரணங்களை விளக்குவேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த கட்சி மாநாடு பிரமாண்டமாக நடத்தப்படும் எனவும், அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் மஹிந்த மேலும் கூறினார்.

---

**பணத்துக்காக**

வாக்குவாதத்தில் தாக்கப்பட்ட 72 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை, இரத்தினபுரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி, ஓபநாயக்க பிரதேசத்தைச் சேர்ந்த அமரசிங்க என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி மதியம் வீட்டில் தாய், தந்தை மற்றும் மகனுக்கு இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதன்போது மகன் கோடரிப் கைப்பிடியால் தந்தையைப் பல முறை தாக்கினார்.

சம்பவத்தில் காயமடைந்த தந்தை 1990 அம்புலன்ஸ் சேவை ஊடாக இரத்தினபுரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், அவர் நேற்று உயிரிழந்தார் என்று ஓபநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்த நபரின் மகன் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

---

**எங்களையும் உயிருடன்....**

அந்த வழக்கில், மாத்தளையைச் சேர்ந்த குடும்பஸ்தரான சுப்பிரமணியம் சுரேந்திர ராஜா சார்பில் சட்டத்தரணிகளான தனுக்க நந்தஸ்ரீ, எஸ்.அனுஷாங்கன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் குறித்த குடும்பஸ்தரிடம் துன்புறுத்திப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தமது வாதாட்டத்தின் மூலம் சட்டத்தரணிகள் வலுவிழக்கச் செய்திருந்தனர்.

இதேவேளை, முல்லைத்தீவைச் சேர்ந்த கனகரத்தினம் ஆதித்தனுக்கு ஆதரவாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகராஜா நிரோஜன் சார்பில் முன்னாள் நீதிபதியான சிரேஷ்ட சட்டத்தரணி கனகா சிவபாதசுந்தரமும் முன்னின்று வழக்கை நெறிப்படுத்தினர்.

மூன்று சந்தேகநபர்களை 'நிரபராதி' என நிரூபிப்பதற்கு எமது நாட்டில் 15 ஆண்டுகள் எடுத்துள்ளது என்பது உண்மையில் கவலை தரும் விடயமே.

இருப்பினும், மிக நீண்ட காலங்களாக துன்பங்களை மாத்திரமே அனுபவித்து வந்த இவர்கள் விடுதலை பெற்று அவர் தம் குடும்பங்களுடன் இணைந்துள்ளமை பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

இவர்கள் விடுதலையாகி வருகின்றபோது, அங்கு சிறையில் இருக்கும் எமது உறவுகள், "எங்களையும் உயிருடன் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்!" எனக் கூறி விழி கலங்க வழியனுப்பி வைத்துள்ளனர் என்று 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ஆகவே, இதேபோன்று, மேலும் சந்தேக நபர்களாக நீண்டகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு அரசியல் கைதிகளும் காலதாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டும்.

அத்துடன், 15 முதல் 28 ஆண்டுகளாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகள் 10 பேரையும் ஜனாதிபதி பொது மன்னிப்பளித்து விடுவித்து அவர்களது எஞ்சியுள்ள வாழும் காலத்தையேனும் மெய்யுறுதி செய்ய அவர்களை உயிர்ப்புடன் விடுவிக்க வேண்டும் என்று ஒரு மனிதநேய அமைப்பாக நாம் விநயமுடன் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கடந்த பல வருடங்களாகத் தமிழ் அரசியல் கைதிகளின் பொது நன்மைக்கென்று குரலுயர்த்தி வருகின்ற 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பானது, மீதமுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளதும் விடுதலை வாழ்வு மெய்ப்படும் வரையில் நடைமுறைக்குச் சாத்தியமான அனைத்து வழிகளிலும் தளர்வுறாது செயற்படும்." - என்றுள்ளது.

---

**உயிர் அச்சுறுத்தல்...**

அமைச்சர் ஒருவரின் பாதுகாப்புக்காகக் குறைந்த பட்சம் ஏழு பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். அமைச்சர் ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது எனக் கோரிக்கை விடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரது பாதுகாப்பு அதிகரிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அதற்கமைய விளையாட்டுத்துறை அமைச்சரின் பாதுகாப்புக்கு கூடுதலாக மூன்று பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், தற்போது அவரது பாதுகாப்புக்காக 10 பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பில் அமைச்சர் ரொஷான் ரணசிங்க, அண்மையில் அம்பலப்படுத்தியதால், தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் முறைப்பாடு அளித்துள்ள பின்புலத்திலேயே தற்போது அவரது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்று சபாநாயகரிடம் அமைச்சர் ரொஷான் ரணசிங்க இன்று முறையிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நூற்றாண்டு சிறப்புரை நிறைவு!

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் தொடர்ச்சியாக ஒவ்வொரு புதன் கிழமையும் இடம்பெற்று வந்த நூற் றாண்டுச் சிறப்புரை நிகழ்ச்சியின் நிறைவு நிகழ்வு நேற்று (15) கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்ட பத்தில் நடைபெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலை யின் பணிப்பாளர் மருத்துவர் த.சத் தியமூர்த்தி விருந்தினராகக் கலந்து கொண்டு 'ஆசிரியரும் நேர்மனப்பாங் கும்' என்ற பொருளில் சிறப்புரையாற் றினார்.

கலாசாலையின் முன்னாள் விரி வுரையாளர் வி.எஸ்.குணசீலன் விருந்தினர் அறிமுக உரையை ஆற் றினார்.

நிகழ்வின் போது நூற்றாண்டு நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதில் பங்களிப்பு நல்கிய கலாசாலையின் கற்பித்தல் சாரா உத்தியோகத்தர் செல்வநாயகம் கஜந்தன் மற்றும் ஆசிரிய மாணவர்களான தங்கன் இன்பதாசன், செலஸ்தீன் கனிஸ்ரன் ஆகியோர் கலாசாலை ஊடக மன்றத் தால் மதிப்பளிக்கப்பட்டனர்.

ஊடக மன்றக் காப்பாளர் விரிவு ரையாளர் தர்சினி முத்துராஜாவின் நெறிப்படுத்திலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மருத்துவர் சத்தியமூர்த்தி கௌரவம் பெற்ற மூவருக்குமான நூற்றாண்டு நினைவுச் சின்னங்களை வழங்கிக் கௌரவித்தார்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலுக்கும் காத்திருக்கிறது சட்டம்

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை இலங்கைத் தீவில் ஏற்படுத்தி, அந்தக் கிரீடத்தை முதன் முதலில் தமக்குத் தாமே சூடிக் கொண்டவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.

இது ஓர் அசைக்க முடியாத அதிகார மையம் என்றுதான் அவர் எண்ணிச் செயற்பட்டார். அவரது அரசியல் வாரிசும், சிஷ்யப் பிள்ளையும், மருமகனுமான இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரைப் போலவே இப்போது அரசியலில் கிழட்டு நரித் தந்தரசாலி என்றே அழைக்கப்படுகின்றார். அவரும் கூட, இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவி என்பது அசைக்க முடியாத அதிகார மையம் என்றுதான் எண்ணுகின்றார் போலும்.

ஆனால் இந்த எண்ணத்துக்கு - நினைப்புக்கு - ஆப்பு வைத்திருக்கின்றது உயர் நீதிமன்றம்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விவகாரத்தை ஒட்டி கடமை தவறிய ஜனாதிபதிக்கும், தமது தவறான பொருளாதார முகாமைத்துவ தீர்மானங்களினால் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறிய ஜனாதிபதி உள்ளிட்ட பணிக்குழாம் அணியினருக்கும் எதிராக அண்மைக்காலத்தில் உயர் நீதிமன்றம் வெளியிட்ட இரு தீர்ப்புகள், அசைக்க முடியாத அதிகார பீடம் ஜனாதிபதி பதவி என்ற கருத்தியலுக்கு வைக்கப்பட்ட சரியான 'செக் மேட்'தான்.

ஆணைப் பெண்ணாக்குவதைத் தவிர, சகல அதிகாரங்களும் என்னிடம் உண்டு என்று முன்னர் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமது அதிகாரங்கள் குறித்து சிலேடையாகப் பேசுவார் என்ற ஒரு செய்தி உண்டு. அந்த அதிகார சாம்ராஜ்யத்துக்கு உயர் நீதிமன்றம் இப்போது வைத்திருக்கும் 'செக் மேட்' ஜனநாயக ஆட்சியின் விழுமியத்திற்கு ஒரு திருப்புமுனை.

உயர் நீதிமன்றம் வழங்கிய மேற்படி இரண்டு தீர்ப்புகளும் பதவியை விட்டு விலகிய அல்லது வெளியேறிய ஜனாதிபதிகள் விடயத்தில் வெளியிடப்பட்டவை என்பதால், அதிகாரத்தில் இருக்கும் வரைத் தமக்கு பிரச்சினை - சிக்கல் - ஏதும் நேராது என்று தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொள்ளலாம்.

ஆனாலும் இந்தப் பதவி அவருக்கு எவ்வளவு காலத்துக்கு, அதன் பின்னர் அவரும் நீதிமன்றத்தின் முன் வாலைச் சுருட்டிக் கொண்டு நிற்க வேண்டி வருமா என்பவை எல்லாம் இனி எழப்போகும் கேள்விகள். ஆனால் இப்போது ஆட்சியிலும் அதிகாரத்திலும் இருக்கும் போதோ, அல்லது அதை விட்டு இறங்கிய அல்லது இறக்கப்பட்ட பின்னரோ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளிக்கக் கடப்பாடுடைய ஒரு விவகாரம் இப்போதே இருக்கின்றது.

அது, நடக்கவிருந்த உள்ளூராட்சித் தேர்தல்களை நிதி அமைச்சர் என்ற முறையில் தமக்கு இருந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி, அதற்கு இடைவழியில் ஆப்படித்த ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுதான்.

ராஜபக்ஷக்கள் 2019 முதல் 2022 வரை எடுத்த தீர்மானங்கள் நாட்டின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்தன என்று உயர்நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லும் அளவுக்கு அந்த விடயங்களில் உயர் நீதிமன்றத்திற்கு திருப்தியான வாதங்களையும் ஆதாரங்களையும் சமர்ப்பித்த நீதித்துறை தரப்புகளுக்கு, தம்முடைய ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை மட்டுமே இலக்கு வைத்து உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் முடக்கினார் ரணில், தமது அரசியல் சுயலாபத்திற்காக அவர் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுத்தார் என்பதை உயர் நீதிமன்றம் திருப்திப்படும் விதத்தில் நிரூபிப்பது அப்படி ஒன்றும் கஷ்டமாக இருக்கப் போவதில்லை என்பது நிச்சயம்.

ஆக, ரணிலுக்கும் காத்திருக்கின்றது நீதி விசாரணை.

# கதிரைகள் அன்பளிப்பு!

(அ.அஸ்வர்)

அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றிவரும் நாபீர் பௌண்டேசன் நிறுவனத்தால் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்துக்கு கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

பாடசாலை சமூகத்தின் அழைப்பை ஏற்று நேற்று (15) காலை இப்பாடசாலைக்கு நேரடியாக விஜயம் செய்த நாபீர் பௌண்டேசன் தலைவர் பொறியியலாளர் யூ.கே.நாபீர் அங்குள்ள குறை நிறைகளைக் கேட்டறிந்தார்.



இதற்கிணங்க முதல் கட்டமாக பாடசாலையின் கூட்ட மண்டபத்துக்குத் தேவையான சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதிக் கதிரைகளை அன்பளிப்புச் செய்தார்.

தமது பாடசாலையின் தேவையை அறிந்து உடனடியாக அதனை நிறைவு செய்தமைக்குப் பாடசாலை நிர்வாகம் நன்றிகளைத் தெரிவிப்பதாக அதிபர் யு.எல்.நஸார் தெரிவித்தார்.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2023

“மரங்களின் பிரதாதொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக ம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்.”

-நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)





# காணி உத்தியோகத்தராகப் பதவி ஏற்பு!

(அஸ்ஹர் ஆதம் )

அம்பாறை மாவட்ட தலைமை காணி உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றுள்ள எம்.ஏ.எம்.றாபி நேற்று புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளைப்பொறுப்பேற்றுக் கொண்டார்.

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் காணி உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த இவர் தனது 30 வருடகால காணி உத்தியோகத்தர் சேவையிலிருந்து தலைமைத்துவ காணி உத்தியோகத்தராக அம்பாறை மாவட்ட செயலகததுக்குப் பதவி உயர்வு பெற்றுச்சென்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்று மேலதிக அரச அதிபர் வீ. ஜெகதீசன் முன்னிலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர்கள் ஜே.லியாகத் அலி, எம்.எம்.ஆசிக் ஆகியோரும் கலந்துகொண்டனர்.







# இளவயதினரின் உளநல, வாழ்வியல் தொடர்பில் தெளிவூட்டும் செயலமர்வு!

(அஸ்ஹர் ஆதம்)

பாடசாலை செல்லும் இளம் பருவத்தினரின் உளநல, வாழ்வியல் மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பாகச் சுகாதார மற்றும் கல்வித்துறை அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் செயலமர்வொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தாய், சேய் நலப்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச். றிஸ்பின் இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தார்.

சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தின் அனுசரணையில் செவ்வாய் மற்றும் புதன் ஆகிய இரு தினங்களில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிகள், கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் கல்வி வலயங்களின் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.



இதன்போது பாடசாலை தரவு மீளாய்வு, இள வயது பருவத்தினரின் வளர்ச்சி, குழந்தை வளர்ப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் மன அழுத்தம், போதைக்கு அடிமையாகும் சந்தர்ப்பங்களும், அதனை தடுப்பதற்கான வழிகளும், உள புத்தாக்க பயிற்சி, விசேட தேவையுடைய பிள்ளைகளைக் கையாளும் முறை, பிள்ளைகளின் வாழ்க்கையில் தற்கால தொழிநுட்பம் (சமூக ஊடங்கள்) ஏற்படுத்தும் தாக்கம் என பல்வேறு தலைப்புக்களில் விரிவுரைகள் இடம்பெற்றன.

உளநலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.நௌபல், சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் றொசான்ந், பிராந்திய தகவல் முகாமைத்துவ பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம்.முஜீப், உளநல வைத்திய அதிகாரி டாக்டர் ஷராப்டீன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.



# நெடுந்தீவு அறநெறிப் பாடசாலைக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் தளபாடம்

சந்நிதியான் ஆச்சிரமம் நெடுந்தீவு அறநெறிப் பாடசாலைக்கு 2 லட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான தள பாடங்களை நேற்று முன்தினம் (14) வழங்கியுள்ளது.

நெடுந்தீவு – நெடுந்தீவு மத்தி பிரதேசத்தில் அமைந்துள்ள வன்றொண்டர் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் 75 இற்கு மேறபட்ட மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவை வழங்கப்பட்டுள்ளன.

15 மேசைகள், 15 வாங்குகள் என்பன குறிக்கட்டுவன் இறங்குத்துறையில் வைத்து அறநெறிப்பாடசாலை நிர்வாகத் திடம் கையளிக்கப்பட்டன.

இந்த உதவித் திட்டத்தை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவா மிகள் வழங்கினார்.



# நிந்தவூர் ஆஸ்பத்திரியில் மாபெரும் சிரமதான நிகழ்வு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் செயற்பாடுகள் மக்களுக்கு பூரண திருப்தி அளிக்க கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய பசுமைப் புரட்சி வேலைத் திட்டத்தின் கீழ் நிந்தவூர் மதீனா விளையாட்டு கழக உறுப்பினர்களின் பங்கு பற்றலோடு நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் மாபெரும் சிரமதான நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.



நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியாசகர் டாக்டர் எம். பி. ஏ .வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்தச் சிரமதான நிகழ்வில் தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர்களான பி. எம் நசிருடீன், எம் .சி .எஸ். சமாஹிலா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ. எம். நியாஸ், வைத்தியசாலையின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் ஐ. எல். எம். றபீக் உட்பட வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் நிந்தவூர் மதீனா விளையாட்டு கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது வைத்தியசாலையின் உட்புற வெளிப்புற சுற்றுச் சூழல்கள் அழகு படுத்தப்பட்டதுடன், வைத்திய சாலை வளாகம் முழுமையாக சுத்தம் செய்யப் பட்டது.

அண்மை காலமாக இந்த வைத்திய சாலை நோயாளர் நலன் உட்பட பல் வேறு வழிகளிலும் முன்னேற்றகரமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.




# கல்முனை மாணவர்களுக்கு உளவளத்துணைப் பயிற்சி

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையில் 2024 ஆம் ஆண்டில் உயர்தரம் கற்கவுள்ள மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 05 நாள் உளவியல் உளவளத்துணை பயிற்சிப் பட்டறை பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.பைசாலால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் வளவாளராகப் பாடசாலையின் பழைய மாணவரும் சிரேஷ்ட உளவளத்துணையாளருமான என். எம்.நௌஸாத் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் ஆசிரிய ஆலோசகர் கே. சாந்தகுமார், பிரதி அதிபர் எம்.ஏ.சலாம், உயர்தரப் பிரிவின் பகுதித் தலைவர் யூ.எல்.செய்னுலாப்தீன், வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் ஏ.எம். ஜனூன் நௌஸாத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.




# மாணவர் மகிமை வேலைத் திட்டத்தில் சமூக சேவை அமைப்பு பாதணி வழங்கல்

(அஸ்ஹர் ஆதம்)

மாணவர் மகிமை வேலைத் திட்டத்தின் கீழ் நிந்தவூர் 'பெஸ்ட் ஒப் யங்' சமூக சேவைகள் அமைப்பால் பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கும் வேலை திட்டம் திங்கட்கிழமை (13) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அமைப்பின் தலைவர் ஐ. எம். நிஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை, நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயம், நிந்தவூர் அல் மினா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பாதணிகள் பாடசாலைகளின் அதிபர்களிடம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்களான ஏ. அப்துல் கபூர், ஏ. சி. ஹாமிது, எம். எச். றாபி, நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலையின் மாணவ நாடாளுமன்றத்தின் சமுதாயத் தொடர்பு விருத்தி மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் எப். அப்துல்லாஹ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதற்கான நிதி அனுசரணையை தனது குழந்தைகளின் பிறந்த நாளை முன்னிட்டு அபுதாபியில் வசிக்கும் நிந்தவூர் 14 ஆம் பிரிவைச் சேர்ந்த ஜமால்தீன் றினாஸ் சாக்கீர் வழங்கியிருந்தார்.

# பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைப் பொதுக்கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் 65 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை மெரின் ட்ரைவிலுள்ள குளோபல் டவர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

கொழும்பு கிளையின் நடப்பாண்டுத் தலைவர் எஸ்.பாலேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் கிளையின் உப போசகரும்,கல்லூரியின் பழைய மாணவருமான டாக்டர் ஜே.என்.சின்னையா கலந்து கொள்வார்.



# பராமரிப்பின்றிக் காணப்படும் கோபாலபுரம் பஸ் தரிப்பிடம்!

(அபு அலா)

திருகோணமலை மாவட்ட கோபாலபுரம் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள பஸ் தரிப்பிடம் கவனிப்பாரற்ற நிலைமையில் காணப்படுகிறது.

இந்த நிலையில் கட்டாக்காலிகளின் தங்குமிடமாக அது உள்ளது என்று பிரதேச மக்கள்கவலை தெரிவிக்கின்றனர்.

குச்சவெளி பிரதேச சபைக்கு கீழுள்ள இந்த பஸ் தரிப்பிடத்தை, அப்பிரதேசத்திலுள்ள பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

தங்களின் அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகத் திருகோணமலைக்கோ அல்லது புல்மோட்டை போன்ற பிரதேசங்களுக்கோ செல்லும் பொது மக்களும் அரச ஊழியர்களும் பஸ்ஸிக்காக இந்த பஸ் தரிப்பிடத்தில் தங்கி நின்று செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.



இந்த பஸ் தரிப்பிடத்தில் இரவு நேரங்களில் கட்டாக்காலிகள் தங்குகின்றன. அதன் கழிவுகளும் காணப்படுகின்றது.

இதுதொடர்பில் குச்சவெளி பிரதேச சபைக்கு அறிவித்தும் அதை கண்டும் காணமல் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மிக நீண்ட காலமாகக் கவனிப்பாரற்ற நிலைமையில் சுத்தம் செய்யப்படாது இந்த பஸ் தரிப்பிடம் காட்சியளிக்கின்றது.

தற்போது மழைகாலம் என்பதால், பஸ் தரிப்பிடத்தில் தங்கி நின்று செல்ல வேண்டிய நிலைமை உள்ளது.

எனவே, குறித்த பிரதேச சபை இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு இந்த பஸ் தரிப்பிடத்தைச் சுத்தம் செய்து பிரயாணிகள் தங்கி நின்று செல்லக் கூடிய வகையில் மாற்றியமைக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர்.





# முன்பள்ளி ஆசிரியருக்கு போசாக்கு விழிப்புணர்வு

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி, அட்டாளைச்சேனை, தீகவாப்பி ஆகிய வற்றில் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு, போசாக்கை மேம்படுத்து முகமாக விழிப்புணர்வு நிகழ்வு அட்டாளச்சேனை சுகாதார வைத்திய காரியாலய கேட்போர் கூடத்தில் நேற்று (15) இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் வைத்தியர் ஏ. எம் .எம். இஸ்ஸதீன் மற்றும் அட்டாளைச் சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் சட்டத்தரணி நஹ்ஹீஜா முஷாபீர் ஆகியோரால் ஆலோசனை மற்றும் தெளிவூட்டல் என்பன வழங்கப்பட்டன. நிகழ்வை முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ. எல். சித்தி சுஹாரா நெறிப்படுத்தியிருந்தார்.





# கல்முனை பொதுச் சந்தை தொடர்பான கலந்துரையாடல்

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளுடனான விசேட கலந்துரையாடல் நேற்று புதன் கிழமை (15) கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், நிதி உதவி யாளர் சசிகலா, நிதிப் பிரிவு பிரதம முகா மைத்துவ சேவை உத்தியோகத்தர் அப் துல் பாஸித், விடய உத்தியோகத்தர் நஸ்ரின் ஹாஜா ஆகியோருடன் சந்தை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஏ.பி. ஜமால்தீன், செயலாளர் ஏ.எல்.கலீல் உள்ளிட்ட பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இதன்போது சந்தைத் தொகுதியில் கடைகளைக் கொண்டு நடத்தும் வர்த்த கர்களுக்கான அறிவுறுத்தல்கள் வழங் கப்பட்டன. சந்தையின் எதிர்கால புனர மைப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

# இலங்கை எழுத்தாளர் கவிதாயினிக்கு கிடைத்தது நோபல் உலக சாதனை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தமிழ்த் தொண்டன் பைந்தமிழ்ச் சங்கமும் நிலாவட்ட இலக்கிய அமைப்பும் சேர்ந்து நடத்திய பத்தாயிரம் கவிதைகள் உலக சாதனைத் தொகுப்பு நூலான "கவித்தேனருவி" எனும் கவிதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா தொகுப்பாசிரியர் கவிஞர் என். சாகிர் உஷேன் தலைமையில் வட சென்னையில் உள்ள எருக்கஞ்சேரி வீ.ஆர்.எம். மஹாலில் (05) நடைபெற் றது.

இந்த நூல் நூறு கவிஞர்களின் சிறப்பான நூறு கவிதைகள் வீதம் தொகுத்து உருவாக்கப்பட்டது.

இந்த நூலில் இலங்கையில் வாழும் அரனாயக தல்கஸ்பிடியைச் சேர்ந்த ஆசிரியையும் எழுத்தாளருமான கவிதாயினி திருமதி நதீரா வதூக், "விடியலைத் தேடும் விழிகள்" என்ற தலைப்பில் சிறப்பான நூறு கவிதை களுடன் தனக்கென ஓரிடத்தைப் பெற்று நோபல் உலக சாதனை படைத்துள் ளார்.

# மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற 109 கிலோ கோழி இறைச்சி அழிப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சியம்பலாண்டுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது மனித பாவனைக்கு உதவாத 109 கிலோ கோழி இறைச்சி அழிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொது சுகாதார பரி சோதகர்கள் பொலிஸாருடன் இணைந்து சியம்பலாண்டுவ பொதுச் சந்தையில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது மனித நுகர்வுக்குப் பொருத்த மில்லாத கோழி இறைச்சி மீட்கப்பட்டது.

இதனை விற்பனை செய்தவர்களும் கைது செய்யப்பட்டு சியம்பலாண்டுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட னர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களை தடுப்புக் காவலில் வைக்குமாறும் மீட்கப்பட்ட கோழி இறைச்சிகளை அழிக்குமாறும் நீதிபதி உத்தரவிட் டார்.









# தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு!

**(த.சுபேசன்)**

சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கச்சாய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றன.

சாவகச்சேரிப் பிரதேசசபைச் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி விரிவுரையாளர் தி.சிவகஜன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை அதிபர் க.மகிந்தன், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் சி.ஹர்சன் மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டது.





# கல்முனை பாடசாலையில் பரிசளிப்பு

**(அஸ்ஹர் ஆதம், நூருல் ஹுதா உமர்)**

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் வருடாந்த மீலாதுன் நபி விழாவும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் இடம் பெற்றன

நிகழ்வுகள் அதிபர் செல்லத்தம்பி கலையரசன் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் பி. ஜிஹானா ஆலிப் கலந்து கொண்டார்.



கௌரவ அதிதியாகக் கல்முனை தமிழ் பிரிவு கோட்டக் கல்வி பணிப்பாளர் ச.சரவணமுத்துவும் விசேட அதிதியாக மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க்.எப்.எம்.அஹமட் அன்சார் மௌலானா நளீமியும் சிறப்பு அதிதிகளாக இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிட்ட ஆலோசகர் ஜனாப் எம்.ஐ.எம்.வலீத், கல்முனை கல்வி வலயத்தின் இஸ்லாம் பாட ஆசிரிய ஆலோசகர் ஜனாப் யூ.எல். றிபாயுடீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முன்னாள் அதிபர்கள், கல்முனை வலய தமிழ் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் அமைப்பின் செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.இன ஒற்றுமையை பிரதிபலிக்கும் வகையில் இங்கு நிகழ்வுகள் இடம் பெற்றன. போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

सत्यमेव जयते

இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

# நல்லதோர் குடும்பம்



சிறப்புரை
திரு. மோகனசுந்தரம்
நகைச்சுவை பேச்சாளர்

இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 18 நவம்பர் 2023 (சனிக்கிழமை)
நேரம் : மாலை 06.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அனுமதி இலவசம்



JRIDE
BEYOND THE ROAD

ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA

+94 703 563213 +94 21 222 8358
www.jride.lk
JRIDE TAXI SERVICE
SPEED IT NET

நாங்கள் தயார் நீங்கள் தயாரா?
WE ARE READY ARE YOU READY?

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள். இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882



# இடிந்த சுரங்கத்துக்குள் சிக்குண்ட 40 பேரையும் மீட்கும் முயற்சி துரிதம்

## ஐந்தாவது நாளாகப் பகீரதப் பிரயத்தனம்




உத்தரகாண்ட் மாநிலம் யமுனோத்ரி தேசிய நெடுஞ்சாலையில் சுரங்கம் தோண்டும் பணியின்போது விபத்து ஏற்பட்டது. 4.5 கி.மீ. நீளமுள்ள இந்த சுரங்கப் பாதையில் 200 மீட்டர் இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டது. சுரங்கப்பாதை இடிந்து விழுந்ததில் 40 தொழிலாளர்கள் உள்ளே சிக்கிக் கொண்டனர். அவர்களை மீட்கும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மீட்புப் பணி இன்று ஐந்தாவது நாளை எட்டியுள்ளது. சுமார் 96 மணி நேரத்திற்கும் மேலாக தொழிலாளர்கள் 40 பேர் சுரங்கத்திற்குள் சிக்கியுள்ளனர். அவர்களுக்கு தேவையான உணவு, தண்ணீர் மற்றும் மருந்துகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன என மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இடிபாடு நிகழ்ந்த இடத்தில் மேலும் ஒரு நிலச்சரிவு ஏற்பட்டதால் மீட்புப் பணியில் சிரமம் ஏற்பட்டது. இருப்பினும் நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் உதவியுடன் உள்ளே சிக்கிய தொழிலாளர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# வங்கக் கடலை ஒட்டி நாளை உருவாகின்றது ‘மிதிலி’புயல்



புதுடெல்லி,நவ.16

வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவானதை தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள துறைமுகங்களில் முதலாம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள துறைமுகங்களில் கப்பல்கள் மற்றும் மீனவர்கள் நலன் கருதி புயல் எச்சரிக்கை கூண்டுகள் ஏற்றப்பட்டு உள்ளன. குறிப்பாக எண்ணூர் காமராஜர், காட்டுப்பள்ளி, கடலூர், நாகப்பட்டினம், புதுச்சேரி, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி உள்ளிட்ட துறைமுகங்களில் முதலாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் மத்திய மேற்கு வங்கக்கடலில் நாளை புயல் உருவாகிறது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்திய மேற்கு வங்கக்கடலில் நிலைக்கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை புயலாக வலுப்பெறும்.

மாலைதீவின் பரிந்துரையின்படி புயலுக்கு மிதிலி என பெயர் சூட்டப்பட உள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.





# காசா பொது மருத்துவமனைக்குள் புகுந்தது இஸ்ரேலின் இராணுவம்!

பலஸ்தீனத்தின் காசா மீது ஆக்கிரமிப்பு நடவடிக்கையைப் பெருத்த எடுப்பில் ஆரம்பித்துள்ள இஸ்ரேல் இராணுவம் நேற்று காசா மருத்துவ மனையின் வளாகத்திற்குள் டாங்கிகள் சகிதம் அதிரடியாக உள் நுழைந்தது.

இஸ்ரேல் இராணுவத்தினர் மருத்துவமனைக் கட்டடத்திற்குள் சென்றுள்ளனர். அவசரப்பிரிவு, சத்திர சிகிச்சை நடைபெறும் இடங்கள், தீவிர சிசிக்சைப் பிரிவுகள் என எல்லா இடங்களிலும் சென்று ஹமாஸ் அமைப்பினரின் செயல்பாடு உள்ளதா என ஆராய்ந்துள்ளனர். இந்த தகவலை அல் ஷிபா மருத்துவமனையின் இயக்குநர் முகமது தெரிவித்துள்ளார்.

அங்கு நடத்தப்பட்ட சோதனையில் கையெறி குண்டுகள், தோட்டாக்கள், கவச உடைகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே இஸ்ரேல் இராணுவம் நுழைந்தபின்னர்மருத்துவமனைக்கான தண்ணீர், மின்சாரம், ஆக்சிஜன் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் துண்டிக்கப்பட்டன என மருத்துவமனையின் இயக்குநர் குற்றம் சாட்டியுள்ளார். மருத்துவமனை வளாகத்தில் இஸ்ரேல் ராணுவம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மார்ட்டின் கிரிபித்ஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஹமாஸை முறியடிக்கும் வகையில் தெற்கு காசாவில் தங்களது பிரசாரத்தை மேற்கொள்ள இஸ்ரேல் இராணுவம் திட்டமிட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான மக்கள் ஷிபா மருத்துவமனையில் இருந்து வெளியேறிய நிலையில், குழந்தைகள் உள்பட நூற்றுக்கணக்கானோர் உயிர் பிழைப்பதற்காக போராடி வருகிறார்கள்.

இதற்கிடையில் –

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் போர் நிறுத்த தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளது.

காசா மீது தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் இராணுவம், ஏறக்குறைய வடக்கு காசாவை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது. தற்போது ஹமாஸ் அமைப்பினர் எங்கு மறைந்துள்ளனர் எனத் தேடிவருகின்றனர்.

தொடக்கத்தில் இருந்தே அல் ஷிபா மருத்துவமனையில் ஹமாஸ் அமைப்பினர் மறைந்து இருந்து செயல்பட்டு வருகின்றனர் என இஸ்ரேல் இராணுவம் குற்றம்சாட்டியிருந்தது. ஆனால், மருத்துவ நிர்வாகம் இந்தக் குற்றச்சாட்டை தொடர்ந்து மறுத்து வருகிறது.











## பாகிஸ்தானில் ஆப்கான் அகதிகள் கட்டாய வெளியேற்றம்

# தமிழகத்தில் வஞ்சிக்கப்படும் ஈழத்தமிழ் அகதிகள்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

**(ஆப்கான் அகதிகளை பாகிஸ்தானில் இருந்து கட்டாயமாக வெளியேற்றுவதற்கு ஐ.நா. எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஆயினும் நீண்ட காலமாகத் தமிழகத்தில் வஞ்சிக்கப்படும் ஈழத்தமிழ் அகதிகள் துயரம் பற்றி எவருமே அக்கறைப்படுவதில்லை)**

நீண்டகாலமாக வாழும் ஆப்கானிய அகதிகளை வெளியேற்றும் விடயத்தில் கூடுதல் அவகாசம் வழங்க வேண்டும் என்று பாகிஸ்தானிடம் தலிபான் கோரிக்கை விடுத்துள்ளது. அதேவேளை ஆப்கான்களை வெளியேற்றும் பாகிஸ்தான் முடிவுக்கு ஐ.நா. எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

1979 இல் ஆப்கானிஸ்தானை ரஷ்யா ஆக்கிரமித்ததில் இருந்து 1989 வரை அமெரிக்க உதவியுடன் ரஷ்யாவை எதிர்த்து போரிட்டு வந்தது. அதன்பின் தலிபான் ஆட்சியின் கொடூரங்களை உலகறியும்.

**பாகிஸ்தானில் ஆப்கான் அகதிகள்**

பல வருடங்கள் நடைபெற்ற இந்த போரின் விளைவாக பொருளாதாரம் சீர்குலைந்து அந்த நாட்டில் வேலை வாய்ப்புகள் குறைந்ததால், வாழ்வாதார காரணங்களுக்காக அங்கிருந்து பலர் வெளியேறி பாகிஸ்தானில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

அமெரிக்கா விலகிய பின்னர் கடந்த 2021 இல் ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பினர் ஆட்சியை மீண்டும் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து மேலும் பலர் அந்த நாட்டிலிருந்து அண்டை நாடான பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்தனர். சமீப காலமாக பாகிஸ்தானின் பொருளாதார நிலையும் மிகப்பெரும் சரிவைக் கண்டுள்ளது. இதனால் அந்த நாட்டுக்குக் கடன் வழங்கும் உலக நிதி அமைப்புகள் அரசின் செலவீனங்களைக் கட்டுப்படுத்தும்படி நிர்ப்பந்தப்படுத்தி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாகத் தங்கள் நாட்டில் தஞ்சமடைந்துள்ள அகதிகளான ஆப்கானிஸ்தானியர்களை வெளியேற்றும் நடவடிக்கையில் பாகிஸ்தான் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. தங்கள் நாட்டிலிருந்து வெளியேற ஆப்கானியர்களுக்கு பாகிஸ்தான் விதித்திருந்த காலக்கெடு நவம்பர் முதல் நாளில் முடிவடைந்தது.

**அகதியாக தமிழகம் வருகை**

ஆப்கானிஸ்தானைப் போலவே இலங்கையிலும் போரின் தொடர்ச்சியாக உயிரைக் காத்துக் கொள்வதற்காக எந்த வித பாதுகாப்புமில்லாத சிறிய படகுகளில் 1983 ஆம் ஆண்டு முதல் அகதியாக இந்தியா நோக்கி தமிழர்கள் வந்தனர்.

1983 ஜுலையில் நடைபெற்ற இனப் படுகொலையின் பின்னர் பெருந்திரளான ஈழத்தமிழ் மக்களை அகதிகளாக தமிழகம் நோக்கித் தள்ளியது.

இனப் படுகொலையில் இருந்து தப்புவதற்காகத் தமிழகத்தில் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழ் அகதிகளின் துயரக் குரல்கள் மறக்க முடியாதவை. இலங்கையின் முள்வேலி முகாம்களின் அவலக் கதைகள் உலகத்துக்கு அம்பலமாகியிருக்கின்றன. ஆனால் தமிழகத்தின் அகதி முகாம்களின் ஈழத் தமிழ் மக்கள் படும் துயரம் யாருக்கும் தெரிவதில்லை.

முள்ளிவாய்க்காலுடன் ஈழத்தமிழ் அகதிகள் கொண்டிருந்த நம்பிக்கையும் முடிவுக்கு வந்து விட்டது என்றே கூறலாம். போர் முடிந்து விட்டதென்று இலங்கை ஆளும் அரசு அறிவித்தாலும், அதுதான் எல்லாம் முடிந்து விட்டதே, எப்போது கிளம்புகிறீர்கள்? என்று தமிழக அரசின் மறுவாழ்வுத் துறை அதிகாரிகளே கேட்பதாகச் சொல்கிறார்கள் தமிழகத்தின் அகதி முகாம்களில் உள்ள ஈழத்தமிழ் மக்கள்.

**தமிழகம் நோக்கிய அகதிகள் வருகை**

தொடர்ச்சியாக 1983-1987, 1989-1991, 1996-2003, 2006-2010 ஆம் ஆண்டுகளிலும் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் நோக்கி வந்தனர். தமிழக மறுவாழ்வுத்துறை அலுவலகத்தின் கணக்கின் படி இந்தக் காலப் பகுதியில் மொத்தமாக 3,03,076 பேர் இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் நோக்கி வந்துள்ளனர்.

**சட்டவிரோத 17 லட்சம் ஆப்கானியர்கள்!**

எந்த ஆவணங்களும் இல்லாமல் பாகிஸ்தானில் தங்கியுள்ளவர்கள் முதற் கட்டமாக வெளியேற்றப்படுவார்கள் என்றும், அகதிகளுக்கான அட்டை வைத்துள்ளவர்கள் தங்க அனுமதிக்கப்படுவார்கள் எனவும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது. ஆனால், அகதி அட்டை வைத்துள்ளவர்களும் குறி வைக்கப்படுகின்றனர் என்று பல அகதிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

பாகிஸ்தானில் சட்டவிரோதமாக 17 லட்சம் ஆப்கானியர்கள் தங்கியிருக்கும் நிலையில் பாகிஸ்தானில் தங்கியிருக்கும் ஆப்கானியர்கள் அனைவரும் நவம்பர் முதலாம் திகதிக்குள் நாட்டை விட்டு வெளியேற உத்தரவு இடப்பட்டது.

இல்லையெனில் கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்தது. கடந்த மாத தொடக்கத்தில் வெளியான இந்த அறிவிப்புக்குப் பிறகு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஆப்கானியர்கள் பாகிஸ்தானை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்த நிலையில் பாகிஸ்தான் அரசின் கெடு முடிவுக்கு வருவதால் தடுப்புக் காவலில் வைக்கப்படலாம் அல்லது தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக ஆயிரக் கணக்கான ஆப்கானியர்கள் எல்லைச் சாவடிகளில் அணிவகுத்து நிற்கின்றனர்.

இந்த நிலையில் தலிபான் அரசு வெளியிட்ட அறிக்கையில், உள்நாட்டு போர் காலத்தில் லட்சக்கணக்கான ஆப்கானியர்களுக்கு அடைக்கலம் கொடுத்த பாகிஸ்தான் மற்றும் பிற நாடுகளுக்கு நன்றி. பாகிஸ்தானை விட்டு வெளியேற யாரையும் கட்டாயப்படுத்த கூடாது. ஆப்கானியர்களுக்கு கூடுதல் அவகாசம் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

**முள்ளிவாய்க்காலுடன் அமைதி நிலை திரும்பியதா ?**

நீண்ட காலமாகத் தமிழகத்தில் ஈழத் தமிழ் அகதிகள் துயரம் பற்றி எவருமே அக்கறைப்படுவதில்லை என்பது

**(18ஆம் பக்கம் பார்க்க)**





# தமிழகத்தில் வஞ்சிக்கப்படும் ஈழத்தமிழ் அகதிகள்!

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவலைக்குரியதே. ஆயினும் ஆப்கான் அகதிகளைப் பாகிஸ்தானில் இருந்து கட்டாயமாக வெளியேற்றுவதற்கு ஐ.நா. எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

தமக்கெதிரான இனப் படுகொலைக் குற்றங்களுக்கு ஈழத்தமிழ் மக்கள் இன்னமும் நீதி பெறவில்லை. தமிழர் பகுதிகள் தொடர்ந்தும் இராணுவ மயமாக்கப்படுகின்றன. சிங்களக் குடியேற்றங்கள் திணிக்கப்படுகின்றன.

ஆயினும் முள்ளிவாய்க்காலுடன் “அமைதி நிலை” திரும்பிவிட்டது என்பது இலங்கை அரசின் கூற்று மட்டுமல்ல, ஐ.நா. மனித உரிமை மன்றத்தின் நிலையும் அதுதான்.

தாக்குதல்களும் ஆட்கடத்தல்களும் தொடர்கின்றன என்பன போன்ற உண்மைகளை மறுக்கவியலாத போதிலும், போர் முடிந்து அமைதி திரும்பிவிட்டது என்பதே ஐ.நாவின் நிலை. வக்கிரமான இந்த நியாயத்தின் அடிப்படையில்தான் அகதிகளாக தஞ்சம் கோரிச் செல்லும் ஈழத்தமிழ் மக்களை ஐரோப்பா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகள் திருப்பி அனுப்புகின்றன.

எந்த நேரத்திலும் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியேற்றப்படலாம் என்ற அச்சம் அவர்களிடம் குடிகொண்டிருக்கிறது. ஈழத்தமிழர் எல்லோருக்கும் தாய் நாட்டுக்குத் திரும்பத்தான் விருப்பம். ஆனால், வீடு இருக்கிறதா, காணி இருக்கிறதா, வாழ முடியுமா என்று நேரில் சென்று பார்த்து விட்டுப் பிறகு முடிவு செய்யலாம் என்பதைக்கூட அரசு அனுமதிப்பதில்லை. போனால் போனதுதான். அங்கே வாழ முடியாது என்று முடிவு செய்து திரும்பி வந்தால், இங்கே அகதி முகாமுக்குள் மறுபடியும் நுழைய முடியாது.

### ஆப்கன்களை வெளியேற்றும் முடிவு?

ஆப்கானிஸ்தான் பல தசாப்தங்களாக தங்கள் சொந்த நாட்டில் அடிக்கடி மோதல்களை எதிர்கொண்டுவருகிறது. இதனால், ஆப்கானிஸ்தானிகள் பலர் பாகிஸ்தானில் குடிபெயர்ந்து வந்தனர்.

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் அகதிகள் அதிகம் உள்ளனர். இவர்களால் பாகிஸ்தான் குடிமக்கள் சிக்கல்களை சந்தித்துவருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபை, உரிமைக் குழுக்கள் மற்றும் மேற்கத்திய தூதரகங்களின் முறையீடுகள் இருந்த போதிலும், அவர்களை நாடு கடத்துவதற்கான தனது முடிவில் தற்போது பாகிஸ்தான் தீவிரமாக உள்ளது.

தலிபான் ஆட்சியின் கீழ் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம், பேரழிவுதரும் பூகம்பங்கள், உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவை பெரும்பாலான மக்கள் வெளியேற காரணமாகும்.

மேலும், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்குக் கல்வி அல்லது வேலை அனுமதிக்கப்படவில்லை.

புலம் பெயர்ந்தவர்களில் பலர் 1970களில் சோவியத் போரின் போது ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறினர். மேலும், ஆவணங்களை வழங்குவதற்கான நீண்ட செயல்முறை காரணமாகப் பலரால் ஆவணங்களைப் பாதுகாக்க முடியவில்லை.

### ஆப்கானியர்கள் நடத்திய குண்டுவெடிப்பு தாக்குதல்

பாகிஸ்தான் தனது சொந்த பொருளாதார விவகாரங்கள் மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஆப்கானியர்களை வெளியேற்றுகிறது என்று கூறுகிறது. முக்கியமாக, ஆப்கானிஸ்தான் குடியேறியவர்கள் பயங்கரவாத தாக்குதல்கள், தெருக் குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆண்டு நடந்த 24 தற்கொலைக் குண்டு வெடிப்புகளில் 14 தாக்குதல்கள் ஆப்கானியர்கள் நடத்தியதாகும்.

### பாகிஸ்தானின் பொருளாதார அவலம்

பாகிஸ்தானின் பொருளாதாரத்தின் அவல நிலையும், தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தானின் பயங்கரவாதத் தாக்குதல்களும் பெரும் பிரச்சினையாக உள்ளன. மற்றொரு முக்கியமான காரணி என்னவென்றால், பாகிஸ்தான் தற்போது ஒரு இடைக்கால அரசின் கீழ் உள்ளது.

இதனால், இந்த இடைக்கால அரசு, வெளியேற்றங்களின் சாத்தியமான அரசியல் அல்லது தேர்தல் வீழ்ச்சியிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், நாடு கடத்தும் உத்தரவு பாகிஸ்தானில் பலத்த விமர்சனங்களைச் சந்தித்துள்ளது.

### தலிபான் கொடூர ஆட்சி

தலிபான்கள் நாடு கடத்தப்படுவதை கடுமையாக விமர்சித்துள்ளனர். இருப்பினும் ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால், அதன் மேல் குளிர் காலம் நெருங்கி வருவதால், ஏற்கனவே மிகவும் பலவீனமான சூழ்நிலையில் உள்ள ஒரு நாட்டுக்குள் மக்கள் திரும்பிச் செல்வதற்கு இது சிறந்த பருவம் அல்ல என்று பிலிப்பா கேண்ட்லர் யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

### பாகிஸ்தான் முடிவுக்கு ஐ.நா. எதிர்ப்பு

10 லட்சத்துக்கும் அதிகமான அகதிகள் நவம்பர் ஒன்றுக்குள் வெளியேற வேண்டும் என்றும் இது அரசின் எந்த ஒரு அழுத்தமும் இன்றி தன்னார்வத்துடன் அவர்களாக மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசின் இந்த உத்தரவுக்கு ஐ.நா. கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

மேலும் 40 ஆண்டுகளாக அகதிகளுக்குப் பாதுகாப்பு அளித்து வந்த பாகிஸ்தான் அரசு, அகதிகளை வெளியேற்றாமல் இருக்க புதிய திட்டத்தை வகுக்க வேண்டும். பாதிக்கப்பட்டு அகதிகளாக தஞ்சம் புகுந்தவர்களிடம் போதுமான ஆவணங்கள் ஏதும் முறையாக இருக்க வாய்ப்பில்லை என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று தலிபான் அரசு கூறியுள்ளது.

மேலும் அகதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பாகிஸ்தான் எடுக்கும் முயற்சிகளுக்கு ஐ.நா. அகதிகள் அமைப்பு ஆதரவு அளிக்க தயாராக உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

செப்டம்பர் மாதம் கராச்சி நகரில் மட்டும் 700 ஆப்கானியர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். தவிர நாட்டின் பல நகரங்க ளில் பலநூறு பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

வெளியேற்றப்படும் ஆப்கானியர்களில் பெரும்பாலானோர் கூலிப் பணிகளில் ஈடுபட்டு வறுமையில் வாழ்ந்து வந்ததால், அவர்களிடம் சேமிப்புகளோ, வேறு பொருள்களோ இல்லாமல் கேள்விக் குறியாகும் எதிர்காலத்துடன் டிரக்குகளில் அடைக்கப்பட்டு ஆப்கா னிஸ்தான் எல்லையில் கொண்டு விடப் படுகின்றனர். அவர்களின் கண்ணீர் கதைகள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

பெண்களுக்குக் கடுமையான கோட்பாடுகளை வலியுறுத்தும் தலிபான் ஆட்சி நடைபெறுவதால் அங்கு செல்ல அஞ்சும் மக்கள், பாகிஸ்தானில் வசிக்க இயலாமல் செய்வதறியாது தவிக்கின்றனர்.

பாகிஸ்தான் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஐ.நா. கோரிக்கை வைத்தது. ஆனால், 40 ஆண்டு காலம் மனிதாபிமான அடிப்படையில் அகதிகளுக்கு இடம் கொடுத்து விட்டதாகவும், இனியும் அதைத் தொடர முடியாது எனவும் பாகிஸ்தான் திட்டவட்டமாக பதிலளித்துள்ளது.





# வாசிப்பை ஊக்குவிக்க அறிவுச்சுடர் போட்டி!

(நூருல் ஹுதா உமர் )

மாணவர்கள் மத்தியில் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் நோக்கில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு தெளஸ் மகே பாகன வேலை திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலகம் நடத்திய அறிவுச் சுடர் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் மத்திய முகாம் அல்–ஹிறா பாடசாலை வளாகத்தில் பாடசாலையின் அதிபர் ஏ.எல்.சனூஸ் தலைமையில் நடைபெற்றன.

மாணவர்களுக்கு 56 பக்கங்களைக் கொண்ட பாடப்பரப்பு உள்ளிட்ட விடயதானங்கள் வழங்கப்பட்டு மாணவர்களை வாசிக்க ஊக்கப்படுத்தி பின்னர் அந்த பக்கங்களில் இருந்து தொகுக்கப்பட்ட போட்டியாக இந்த அறிவுச் சுடர் போட்டி ஆறு குழுக்களுக்கு இடையில் இடம் பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகியின் வழிகாட்டலில் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.ஷினாஸ் ஒருங்கிணைப்பில் மிகவும் சிறப்பாக இடம்பெற்ற இந்த போட்டியில் பொது அறிவு வினாக்கள், பாடப்பரப்பில் உள்ள வினாக்கள், மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய இதர தகவல்களை உள்ளடக்கியதான வினாக்கள் கேட்கப்பட்டன.

இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன் கலந்து கொண்டு போட்டியில் பங்கு பற்றிய சகல மாணவர்களுக்கும் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம். றின்சான், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாச்சார உத்தியோகத்தர் திருமதி நகுலநாயகி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சார்மிலராஜன், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுல்பிக்கா, சுதேச மருத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஏ.ஆர்.ஜனூபா, விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எம்.ரிபாயா ஆகியோர் கலந்து கொண்டனர்.



# தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு!

(பழுவூரான்)

தேசிய மட்டத்தில் சாதனை படைத்த வின்சென்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தவத்திரு மகள் உதயகுமார் தலைமையில் நேற்று புதன்கிழமை (15) இடம் பெற்றது.

இதன் போது சாதனை படைத்த மாணவிகள் மட்டக்களப்பு காந்திப் பூங்கா முன்றலில் இருந்து பான்ட் வாத்திய இசை முழங்க ஆசிரியர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஊர் வலமாக கல்லூரியின் பிரதான மண்ட பத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

தேசிய மட்ட ரீதியில் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட தமிழ் தினம் மற்றும் ஆங்கில தினப் போட்டிகளில் பங்கு பற்றி சாதனை படைத்து கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவி களை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கல்லூரி ஆசிரியரும், தமிழ் மொழித் தின இணைப்பாருமான சோமசுந்தரம் சிவநந்தி ஆசிரியரின் ஒருங்கிணைப்பில் நடத்தப்பட்ட நிகழ்வில் பரத நடனத்தில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவி விக்னேஷ் வரன் இஷானிகா மற்றும் ஆங்கில சொல்வளப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்றுக் கொண்ட மாணவி சசிகுமார் ஹர்ஷிகா ஆகிய மாணவிகள் இருவரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர்களான சிவஞான ஜோதி குரு, மகேஸ்வரன் விக்னேஸ்வரி மற்றும் கல்லூரி பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# ஒலிம்பியாட் போட்டியில் வெண்கலப் பதக்கம்!



இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி தயாரிப்பாளர் எம். ரழீம், அல் இர்பான் மத்திய கல்லூரி ஆசிரியை எம். டி. எப். ஷர்மிலா தம்பதியரின் புதல்வியும், பொல்கஹவெல அல்–இர்பான் மத்திய கல்லூரியில் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவியுமான ருகையா ரழீம் தெற்காசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

அகில இலங்கை ரீதியாக கடந்த 30.09.2023 நடந்த ஒலிம்பியாட் போட்டியில் இலங்கையில் 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றுள்ளார். சிங்கப்பூரில் நடைபெறவுள்ள உலகளாவிய போட்டியிலும் இவர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.